தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 22, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 மே 5, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்."

நல்ல முறையில் ஆளும் திறமை பெற்றவர், தான் பிறந்த குடிக்கே பெருமை சேர்ப்பவராவார்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 221, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

221—

கடலரிப்பு தடுப்புச் சுவர்

***3852—திரு. எம்.ஆர். காந்தி:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் தொகுதி, இராஜாக்கமங்கலம் ஊராட்சி, தெக்குறிச்சி கடற்கரையில் கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராஜாக்கமங்கலம் ஊராட்சி, தெக்குறிச்சி கடற்கரை பகுதிகளை தொடர்ச்சியாகக் கண்காணித்து, கடல் அரிப்பு தடுப்புச் சுவர் அமைக்க வேண்டிய சூழல் ஏற்படுமானால், அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து, நிர்வாக அனுமதி பெற அரசிற்கு அனுப்பப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.

திரு. எம்.ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராஜாக்கமங்கலம், தெக்குறிச்சி கடற்கரைப் பகுதியில் அலைகளினால் மண் அரிப்பு ஏற்பட்டு, கடல் நீர் உட்புகுந்திருக்கிறது. ஏறத்தாழ 400 மீட்டருக்கு அதிகமான தூரத்திற்கு கடல் நீர் நிலப் பகுதியில் உட்புகுந்திருக்கிறது. எனவே, அந்தப் பகுதிகளில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் கட்டித் தரப்பட வேண்டும். இல்லையென்றால், கடல் நீர் நிலத்தடி நீரைப் பாழ்படுத்தி, உப்பு நீராக மாற்றிவிடும். கடல் நீர் அதிகமாக வருமானால், அந்தப் பகுதிகளில் நடைபெறக்கூடிய தென்னை மட்டைகள் கதம்பல் தொழிலும் அழிக்கப்பட்டுவிடும். இன்னும் அதிகமாக கடல் நீர் வருமானால், கிராமங்களுக்குள்ளும் கடல் நீர் வருவதற்கான வாய்ப்புண்டு. மத்திய அரசாங்கத்தினுடைய மீன்குஞ்சு ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எம்.ஆர். காந்தி: கடல் அரிப்பு தடுப்புச் சுவர் கட்டவில்லையென்றால், அந்த ஆராய்ச்சி நிலையமும் அரித்துச் செல்லப்படுவதற்கான வாய்ப்பிருக்கிறது. எனவே, கடல் அரிப்பு தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 மே 5]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில், கடல் அரிப்பு என்பது ஒரு சோகக் கதை. கிட்டத்தட்ட வட்டக்கோட்டையிலிருந்து லெமூர் கடற்கரை வரையில் 70 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடல் அரிப்பு இருக்கிறது. இந்த 70 கிலோ மீட்டர் தூரத்தில், இதுவரையில் 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடல் அரிப்பு தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகளை நாங்கள் செய்திருக்கிறோம். தெக்குறிச்சியைப் பொறுத்தவரையில், அது ஒரு மீனவ கிராமம். அங்கே மீன் பிடிப்பவர்கள் மட்டுமல்ல, கயிறு திரிப்பவர்களும் நிறைய இருக்கிறார்கள். அவர்களுடைய உடைமைகள் அடித்துக்கொண்டு போய்விடுகிற நிலைமை அங்கே உருவாகியிருக்கிறது. ஆகவே, அங்கே 400 மீட்டர் தூரத்திற்கு தடுப்புச் சுவர் அமைக்கப்பட வேண்டும். அதற்காக 3.5 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று ஏற்கெனவே அந்தப் பகுதியில் 1,200 மீட்டர் தூரத்திற்கு ஒரு தடுப்புச் சுவர் அமைத்திருந்தோம். அதுவும் பாழாகிவிட்டது. அதையும் கடல் நீர் அடித்துக்கொண்டு போய்விட்டது. அதைச் சீர்செய்வதற்கு 4.67 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆக, இப்பொழுது கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய் இருந்தால்தான் அந்தப் பகுதியைச் சீர்செய்ய முடியும். இதற்கான மதிப்பீடு தயார் செய்யச் சொல்லியிருக்கிறோம். அது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு வந்த பிறகு அரசின் ஒப்புதலைப் பெற்று, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள், செய்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். நன்றி சொல்லிவிடலாமே?*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே தடுப்புச் சுவர் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இராஜாக்கமங்கலம் ஊராட்சிப் பகுதி, இராஜாக்கமங்கலம், அனத்தங்கரை மற்றும் அதற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய பன்றிவாய்க்கால் ஓடையில் ஒரு தடுப்பணை கட்டினால் கடல் நீர் கிராமங்களுக்குள் புகாமல் இருக்கும் என்பதால் தடுப்பணை அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு, நன்றி சொல்லி, அமர்கிறேன். ஜெய்ஹிந்த்.*

[2022 மே 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்றமுறையே சொன்னேன். வங்காள விரிகுடா கடலில் 11 கிலோ மீட்டர் தூரமும், அரபிக் கடலில் 59 கிலோ மீட்டர் தூரமும் கடற்கரைப் பகுதியாக உங்கள் ஊரில் உள்ளன. இந்த ஊரில்தான் தடுப்புச்சுவர் இருக்கிறது; அந்த ஊரில் இல்லையென்று சொல்லவில்லை. ஏற்கெனவே பல ஊர்களில், பூந்துறை, பெரியநாயகி, கோவளம், அழிக்கால், மேல்மிடாலம், இணையம் போன்ற ஊர்களில் ரூ.70 கோடி செலவில் நாங்கள் தடுப்புச் சுவர் அமைத்திருக்கிறோம். இணையம் உட்பட மேற்கண்ட ஊர்களில், நாங்கள் ஆட்சியில் இருந்தபோது செய்தது என்று எனக்கு நினைவுக்கு வருகிறது. ஆகையினால், நாம் இதை ஒரு பக்கம் செய்து கொண்டே இருப்போம், மற்றொருபுறம் கடல் அரிப்பு விழுங்கிக் கொண்டேயிருக்கும். மீண்டும் அதனைச் சரி செய்துகொண்டேயிருப்போம். இது ஒரு தொடர்கதையாகும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 2001–ல் அன்றையதினம் நான் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது கிட்டத்தட்ட ரூ.150 கோடி செலவில் ஆரோக்கியபுரம் முதல் நீரோடு வரை கற்கள் போடப்பட்டன. இப்போது உள்ள சூழ்நிலை என்னவென்றால், இதற்கான* raw materials *கிடைக்கவில்லை. கற்கள் மற்றும் மண் கிடைக்கவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் குவாரி தொழிலே கிடையாது; மண்ணும் கிடையாது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய காலத்தில் 'வாழ்க்கை' என்ற*

2022 மே 5]

ஒரு திரைப்படத்தில் நடித்த சாரங்கபாணி என்ற நடிகர் அந்தக் காலத்தில் 'நான் college-ல் படிக்கும்போது' என்று சொல்லிக்கொண்டிருப்பார். (சிரிப்பு) அதுபோன்று உறுப்பினர், எதற்கெடுத்தாலும் 'நான் அந்தக் காலத்தில் மந்திரியாக இருந்தபோது' என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறார். ஆகையினால், உங்கள் ஊரில் உள்ள குவாரியின் நிலைமை என்னவென்று உங்களுக்கே தெரியும். அங்கு ஒரு பிரச்சினை தொடர்ந்து இருக்கிறது. வேண்டும் என்று ஒரு பிரிவும், வேண்டாம் என்று ஒரு பிரிவும் இருக்கின்றது. சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்த பிறகு ஒரு முடிவிற்குக் கொண்டுவரப்படும். மற்றதெல்லாம் நடக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், நீங்கள் கன்னியாகுமரி மாவட்டம் சம்பந்தமான கேள்வியை முடித்துவிடுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய குளச்சல் சட்டமன்றத் தொகுதியில், முக்கியமான பகுதியான சிங்காரவேலன் காலனி பகுதியில் கடல் அரிப்பால் அந்தக் கிராமமே அழிந்துவிட்டது. சுனாமியின்போது நூற்றுக்கணக்கான மக்களைக் காவு வாங்கியது. மக்கள் இப்போது ஆபத்தான நிலையில் இருக்கின்றார்கள். அந்தப் பகுதியில் உடனடியாகத் தடுப்புச் சுவர் அமைத்து மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்றும், மேலும் அதற்குண்டான நடவடிக்கைகளை நீங்கள் எடுப்பீர்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போதுதான் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார். அதுகுறித்து அரசு ஆராய்ந்து பார்க்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

[2022 மே 5

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகர் பகுதியில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் அமைக்க வேண்டுமென்று சட்டப் பேரவையிலும் பேசியிருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வந்திருந்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்று ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகள் தொடங்கப்பட இருக்கின்றன. அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது, நாகூர், கீழப்பட்டினச்சேரியில் கடல் அரிப்பு ஏற்பட்டு, தென்னை மரங்கள் விழுந்து, வீடுகள் எல்லாம் இடிந்திருக்கின்றன. அங்கேயும் கடல் அரிப்புகளைத் தடுப்பதற்காக தடுப்புச் சுவர் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை மக்களிடம் எழுந்திருக்கிறது. ரூ.7 கோடிக்குத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணியும் விரைந்து நிறைவேற்றித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப்போல், இப்போது மிக ஆபத்தான நிலையில் இருப்பது தஞ்சாவூர் மாவட்டம்தான். அதாவது ஒன்றுபட்ட தஞ்சாவூர் மாவட்டம். நாகப்பட்டினம் பகுதி சேர்ந்த மாவட்டம். கடல் அரிப்பு ஏற்பட்டு, தண்ணீர் உள்ளே புகுந்து, விளைநிலங்களைப் பாழ்படுத்தியதோடு மட்டுமல்லாமல், குடிநீருக்குக்கூட பஞ்சம் ஏற்படும் நிலை உள்ளது. ஆகவே, 35 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடல் அரிப்புகளைத் தடுப்பதற்காக என்னென்ன பணிகளைச் செய்திருக்கிறோம் என்பதை நான் அன்றைக்கே ஒரு கேள்விக்குப் பதிலாக அளித்திருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை அரசு மிகக் கவனமாக மேற்கொள்ளும். காரணம், மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் அங்கே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.